**திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - C**

**2024-12-15**

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் செப்பனியா நூலிலிருந்து வாசகம்* 3: 14-17,

*எசா* 12: 2-3. 4. 5-6,

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 4: 4-7,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 3: 10-18 )

*திருப்பலி முன்னுரை*

*மகிழ்ச்சிக்குரியவர்களே, திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அண்மையில் உள்ளதை நினைத்து அகமகிழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமது மகிழ்ச்சியை மட்டுமல்ல, நம்மிடம் உள்ள அனைத்தையுமே பிறரோடு பகிர்ந்து வாழ திருமுழுக்கு யோவான் நம்மைத் தூண்டுகிறார். "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்துகொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்." தூய ஆவி என்னும் நெருப்பால் நமக்கு திருமுழுக்குக் கொடுக்கும் வலிமைமிக்க ஆண்டவரின் வருகைக்காக நாம் காத்திருக் கிறோம். அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிக்கப்படும் பதராக இல்லாமல், அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படும் கோதுமையாக வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*சிறந்து விளங்கும் இறைவா!*

*திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறாகிய இன்று திருஅவையின் அனைத்து நலன்களுக்காகவும் உமது பணியினைச் சிறப்புடன் செய்திடவும் வேண்டிய அருளினைப் பொழிந்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*சிறந்து விளங்கும் இறைவா!*

*எங்கள் குடும்பங்களில் சண்டை, சச்சரவு இல்லாமல் மகிழ்ச்சியும், ஒற்றுமையும், சமாதானமும் நிலை வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*சிறந்து விளங்கும் இறைவா!*

*இன்று நாங்கள் உமது படைப்பின் மேன்மையை உணராமல் இயற்கையை அழிக்கும் சக்திகளாக வலம் வருகிறோம். உமது படைப்பின் முக்கியத்துவத்தினை அறிந்து இயற்கையைப் பாதுகாக்கும் பிள்ளைகளாக எம்மை மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்*

*சிறந்து விளங்கும் இறைவா!*

*நாங்கள் வீண்பெருமையினால் கடின உள்ளத்தோடு வாழ்கிறோம். இத்திருவருகைக் காலத்தில் எங்கள் கடின உள்ளத்தை மாற்றி பாலன் பிறக்கும் இடமாக எங்கள் மனதினை மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*சிறந்து விளங்கும் இறைவா!*

*கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆடம்பரத்தைத் தவிர்த்து, ஆன்மீக விசுவாசத்தில் வேரூன்றி வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*புனிதம் மிகுந்தவராம் இறைவா,*

*புனிதத்துக்கு எதிராக எம் நாட்டில் நிலவும் ஒழுக்கக் கேடுகளும், பொய்யான வழிபாடுகளும் மறையும் வகையில் மக்களிடையே மனமாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*மேன்மை நிறைந்தவராம் இறைவா,*

*உம் திருமகனின் வருகைக்காக எப்பொழுதும் விழித்திருந்து மன்றாடுபவர்களாய் வாழும் வரத்தை, எங்கள் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் வழங்கி, உடல், உள்ள, ஆன்ம சுகத்தோடு பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*